# பெரிய கூட்டங்களாகவும் வீடுகளிலும் கிறிஸ்தவர்கள் கூடுகிறார்கள்

**சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் H6b யை வாசிக்கவும்.**

**ஜெபம்:** “கர்த்தராகிய இயேசுவே, உமது உயிர்த்தெழுதலின் மூலம் எங்களை ஜீவன் உள்ளவர்களாக்கினீர். உயிருள்ள சபை அங்கமாக நாங்கள் சபைகளைப் பல்கிப் பெருகுமாறு செய்ய உதவும்.”

## 1. சிறிய வீட்டு சபைகளாக செயல்பட உங்கள் சபைக்கு உதவுவதற்கு ஆயத்தம் ஆகுங்கள்.

ஆதி கிறிஸ்தவர்கள் எவ்வித இடங்களில் ஒன்றாகக் கூடினர் என்பதை அப். 2:46, 4718:7 ல் காண்க. *(பதில்கள் சாய்வு எழுத்துக்களில்)*

- கர்த்தரின் பந்தியை விசுவாசிகள் எங்கு ஆசரித்தனர் என்பதை அப். 2:46 ல் காண்க. *(அவர்களது வீடுகளில்)*
- அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றி எங்கு போதித்தனர் என்பதை அப். 5:42லும் 20:20 லும் காண்க. *(ஜெப ஆலயங்களிலும் வீடுகளிலும்)*
- பிலிப்பியில் அப்போஸ்தலர்கள் விசுவாசிகளை எங்கு சென்று தேடினர் என்பதை அப். 16:40ல் காண்க. *(லீதியாளின் வீட்டில்).*

அப்போஸ்தலர் பவுல் நிரூபங்களை எழுதிய பெரும்பாலான சபைகள் எங்கு கூடின என்பதை அப்.16:40, ரோமா 16:5, 1கொரி. 16:19, கொலோ 4:15-16, பிலே.1:1-3ல் காண்க. *(மக்களின் வீடுகளில்)*

சில சபைகள் யானையைப் போன்றவை. அவைகள் வலிமையானவை. நிறைய வேலைகளைச் செய்ய முடியும். மற்றவை சின்னஞ்சிறு முயல்களைப் போன்றவை. வலிமை இல்லாதவை. ஆனால் வேகமாகப் பெருக முடியும்.

| | யானைகள் | முயல்கள் | |
|---|---|---|---|
|  | • 18ஆண்டுகளில் தக்கப் பருவம் அடையும்<br>• ஒரு ஈற்றுக்கு ஒரு குட்டி.<br>• வருடத்திற்கு நான்கு முறை கரு உண்டா-கும் திறன் பெறும்<br>• பேறுகால அளவு 22 மாதம்<br>• குடும்பம் 3 வருடத்தில் 2 அல்லது 3 பெருகும். | • 4 மாதங்களிலேயே பருவம் அடையும்<br>• சராசரியாக 1 ஈற்றுக்கு 7 குட்டிகள்<br>• எப்போதுமே கருத்த-ரிக்கும் திறனுடன்.<br>• பேறுகால அளவு 1 மாதம்<br>• முன்று வருடத்தில் குடும்பம் 426 மில்லியன் (1 மில் = 10 லட்சம்) அளவு பெருகும் |  |

## 2. புதிய வீட்டு சபைகளை நிறுவுவது எப்படி என்று உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

வீட்டு சபைகளின் வசதிகள் சிலவற்றைக் குறித்து உங்கள் உடன் ஊழியர்களுடன் விவாதிக்கவும்.

- பெரிய கூட்டங்களை விட இவை விரைவில் பலுகும்.
- புதிய மேய்ப்பர்களால் இவற்றை வழிநடத்த முடியும்
- ஒவ்வொருவரும் மற்றவர்களை தங்கள் ஆவிக்குரிய வரத்தால் ஊக்கப்படுத்த முடியும்.
- புதிய ஏற்பாட்டில் உள்ள "ஒருவருக்கொருவர் கற்பனைகள்" யாவருமே நடைமுறைப் படுத்த முடியும்.
- ஒரு கோவிலைக்கட்ட பணம் தேவை இல்லை.
- எதிரான அதிகாரிகளின் கண்களுக்கு அநேகமாகப் புலப்படுவதில்லை.

வீட்டு சபைகளில் சேவை புரியும் புதிய மேய்ப்பர்களை எவ்விதம் வழிகாட்டி அறிவுரை வழங்குவது என்று உடன் ஊழியர்களுடன் **திட்டமிடவும்.**

"புதிய மேய்ப்பர்களுக்கு போதிப்பது பற்றிய வழிகாட்டல்" A0g என்ற பவுல்-தீமோத்தேயு தலைவர் பயிற்சி பாடத்தை யாவரும் ஒன்றாக **வாசிக்கவும்.**

புதிய மேய்ப்பர்கள் ஆகக் கூடிய உங்கள் உடன் ஊழியர்களுடன் **கலந்துரையாடவும்.** புதிய வீட்டு சபைகளை வழிநடத்தும் தலைவர்களை சந்தித்து அவர்களைப் பயிற்றுவிக்க ஒத்துக் கொள்ளவும். நல்ல மேய்ப்பர்கள் யாரில் இருந்து உருவாவார்கள் என்றால்:

- தங்கள் குடும்பத்தை ஆராதனையில் வழிநடத்துவோர்.
- மற்றவர்களை ஒருங்கிணைக்கக் கூடியவர்கள்.
- தங்கள் சமுதாயத்தில் நல்ல பெயரை உடையவர்கள்.

புதிய மேய்ப்பர்களை வீட்டு சபைகளை வழிநடத்த பயிற்றுவிக்கும் போது **திட்டமிட** வேண்டிய செயல்பாடுகள்:

- தேவனை துதித்தல்
- இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது
- புதிய விசுவாசிகளை ஞானஸ்நானப்படுத்துவது
- ஒன்றாக அப்பம் பிட்குதல்
- உடனடி தேவைகளை சந்திக்கக் கொடுப்பது
- ஒன்றாக வேதத்தைக் கற்பது
- ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்துவது
- மற்றவர்களுக்கு சேவை புரிதல்
- நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்
- மற்ற வீட்டு சபைகளோடு ஒத்துழைப்பது.

வீட்டு சபைகள் எங்கு எப்போது பெரிய கூட்டமாகக் கூடி வருவது என்பதை, (சாத்தியமாய் இருந்தால்) **திட்டமிடுக.** எதற்கு எனில் -

- வலிமையான வேத போதகர்களையும் வரம் படைத்த பிரசங்கிகளையும் கேட்க.
- தங்கள் தங்கள் சிறு குழுக்களிலே, தேவன் செய்பவற்றை அறிக்கையாகப் பகிர்ந்து கொள்ள.

- தாலந்துள்ள இசைவாணர்களைக் கேட்டு புதிய பாடல்களைப் படிக்க.
- பிற விசுவாசிகளை சந்தித்து சிநேகிதத்தைக் கட்ட.
- வாய்ப்புகளைக் கண்டறிந்து புதிய ஊழியங்களைத் திட்டமிட.
- தேவனைத் துதித்து ஜெபிக்க
- **எச்சரிக்கை:** பெரிய கூட்டங்கள் அடிக்கடி நடந்தால் சில விசுவாசிகள் வீட்டு சபைக்கு வருவதை நிறுத்தி விடக்கூடும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுதல்.

தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற நடவடிக்கைகளை தேர்ந்தெடுக்கவும்.

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்த சிறுநாடகத்தையும் கேள்விகளையும் பெரியவர்களுக்கு வழங்கலாம்.

மேலே உள்ள பகுதி 1 ல் நீங்கள் அறிந்தவற்றை **விளக்கி கேள்வி கேட்கலாம்.**

விசுவாசிகள் இணைந்து எத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடலாம் என்பதை 1 **கொரி. 14:26-32** ஐ வாசித்து விவாதிக்கவும்.

விசுவாசிகள் தங்கள் குடும்பங்களிலும் வீட்டு சபைகளிலும் செய்யக் கூடிய செயல்பாடுகளை இணைந்து **பயிற்சி** செய்யவும்.

**கர்த்தரின் பந்தியை ஆசரிக்க** 1 கொரி. 11:18-34 ஐ வாசிக்கவும்.

**மனனம்** செய்ய வேண்டிய வசனம் மத்.18:20.

விசுவாசிகள் மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட **குழுக்களாகக்** கூடி ஒருவர் கூறுவதை ஒருவர் கேட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும்.



நீங்கள் புதிய மேய்ப்பர்களை பயிற்றுவிக்கிறவர்களாய் இருந்து, இன்னும் **A0f** புதிய மேய்ப்பர்களை பயிற்றுவிப்போர்களுக்கு வழிகாட்டுதல்கள், என்ற ப-தீ பாடத்தை படிக்கமால் இருந்தால் உடனடியாகப் படிக்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy Trainers. May be freely copied.
Download from www.Paul-Timothy.net